<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.</u>

<u>CC. No. 266/2023</u>

2025-ம் ஆண்டு நவம்பர் மாதம் 11-ம் நாள் செவ்வாய்கிழமை அரசு தரப்பு சாட்சி- 1(PW-1)**-ன் வாக்குமூலம்** (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின்படி) **திருமதி.A.பத்மபிரியா மூன்றாம் நிலை எழுத்தர்** அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **சக்திவேல்** | தொழில் | | **ஓட்டுநர்** |
| த/பெ. | : | **கலியபெருமாள்** | **ஊர்** | | **சாத்தனூர்** |
| வயது | : | 46 | மாவட்டம் | | **தஞ்சாவூர்** |

<u>11.11.2025</u>

**<u>எதிரிகள் ஆஜர்.</u>**

**<u>முதல் விசாரணை:</u>**

1) நான் சாத்தனூரில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். எனது அண்ணன் மற்றும் அவரது மகன்கள். (சாட்சி எதிரிகளை அடையாளம் காட்டுகிறார்.)

2) சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் தேதி, மாதம், ஞாபகம் இல்லை. எங்கள் வீட்டிற்கு சுமார் இரவு 10.30 மணியளவில் நான் எனது வீட்டிற்கு சென்று கொண்டிருந்த போது. யாரோ என்மீது கல்லை வீசி தாக்கிவிட்டார்கள். அதில் நான் மயக்கம் ஆகிவிட்டேன். அங்கு ஆஜர் எதிரிகள் இருந்தார்களா என்று எனக்கு தெரியாது எதிரிகளுக்கும் எங்களுக்கும் சொத்து பிரட்சனை தொடர்பாக முன் விரோதம் இருந்ததால் போலீசாரிடம் விபரம் சொன்னேன். போலீசார் என்னிடம் கையொப்பம் வாங்கிக்கொண்டார்கள். அதில் என்ன எழுதியிருந்தது என்று நான் படித்து பார்க்கவில்லை. **( புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி, அரசு தரப்பில் அனுமதி கேட்கப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு , நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

கடந்த 01.06.2023 ஆம் தேதி இரவு 10.30 மணியளவில் நானும் எனது மனைவியும் வீட்டில் இருந்த போது எதிரிகள் என்னை அசிங்கமாக திட்டி, செங்கல்லால்லும், கையாலும தாக்கி, கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. மேற்சொன்னவாறு நான் புகார் அளித்துவிட்டு தற்போது எதிரிகளுடன் நான் சமாதனமாக சென்றதால். வழக்கு சம்பவ சங்கதிகளை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாகவும் அரசுக்கு எதிராகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை.</u>**

திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்./–எஸ்.ஆக்னஸ் ஜெப கிருபா,
நீதித்துறை நடுவர்,
திருவையாறு.

## <u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.</u>

## <u>CC. No. 266/2023</u>

2025–ம் ஆண்டு நவம்பர் மாதம் 11–ம் நாள் செவ்வாய்கிழமை அரசு தரப்பு சாட்சி– 2(PW–2)**–ன் வாக்குமூலம்** (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) **திருமதி.A.பத்மபிரியா மூன்றாம் நிலை எழுத்தர்** அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **சாந்தி** | தொழில் | | **வீட்டுக்குடித்தனம்** |
| த/பெ. | : | **சக்திவேல்** | ஊர் | | **சாத்தனூர்** |
| வயது | : | 43 | மாவட்டம் | | **தஞ்சாவூர்** |

**<u>11.11.2025</u>**

**<u>எதிரிகள் ஆஜர்.</u>**

**<u>முதல் விசாரணை:</u>**

1) நான் சாத்தனூரில் வசித்து வருகிறேன். அ.சா.1 எனது கணவர். ஆஜர் எதிரிகளை தெரியும். எனது கணவரின் அண்ணன் மற்றும் அவரது மகன்கள். (சாட்சி எதிரிகளை அடையாளம் காட்டுகிறார்.)

2) சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் தேதி, மாதம், ஞாபகம் இல்லை. எங்கள் வீட்டிற்கு சுமார் இரவு 10.00 மணிக்கு மேல் நான் எனது வீட்டிற்குள் இருந்தபோது எனது கணவர் சத்தம் கேட்டு நான் வெளியே வந்து பார்த்தபோது அவரது நெற்றில் இரத்தம் காயம் இருந்தது அவரை திருவையாறு அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று அங்கிருந்து 108 ஆம்புலணஸ் மூலம் தஞ்சாவூர் TMCH மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன்.

3) யாரோ அவர் மீது கல்லை வீசி தாக்கிவிட்டாதாக சொன்னார். அதை நான் பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி, அரசு தரப்பில் அனுமதி கேட்கப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு , நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

கடந்த 01.06.2023 ஆம் தேதி இரவு 10.30 மணியளவில் நானும் எனது எனது கணவரும் வீட்டில் இருந்த போது எதிரிகள் எனது கணவரை அசிங்கமாக திட்டி, செங்ககல்லால்லும், கையாலும தாக்கி, கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. மேற்சொன்னவாறு நான் போலீசில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதனமாக சென்றதால். வழக்கு சம்பவ சங்கதிகளை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாகவும் அரசுக்கு எதிராகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – </u>**<u>இல்லை.</u>

திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்./–எஸ்.ஆக்னஸ் ஜெப கிருபா,
நீதித்துறை நடுவர்,
திருவையாறு.

## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.

## CC. No. 266/2023

2025–ம் ஆண்டு நவம்பர் மாதம் 11–ம் நாள் செவ்வாய்கிழமை அரசு தரப்பு சாட்சி– 3(PW–3)**–ன் வாக்குமூலம்** (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) **திருமதி.A.பத்மபிரியா மூன்றாம் நிலை எழுத்தர்** அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **முருகானந்தம்** | தொழில் | | **கூலிவேலை** |
| த/பெ. | : | **கலியபெருமாள்** | ஊர் | | **சாத்துனூர்** |
| வயது | : | 50 | மாவட்டம் | | **தஞ்சாவூர்** |

**11.11.2025**

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை:**

1) நான் சாத்தனூரில் வசித்து வருகிறேன். அ.சா.1, அ.சா.2 எனது பக்கத்து வீட்டுககாரர். ஆஜர் எதிரிளையும் எனக்கு தெரியும் பக்கத்துவீட்டுக்காரர்கள்.

2) அ.சா.1 எதற்காக வழக்கு தாக்கல் செய்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. வழக்கு பற்றி எனக்கு வேறு எதுவும் தெரியாது. சம்பவம் சமயத்தில் நான் தூங்கிக்கொண்டிருந்தேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி, அரசு தரப்பில் அனுமதி கேட்கப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு , நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

கடந்த 01.06.2023 ஆம் தேதி இரவு 10.30 மணியளவில் அ.சா.1 ம் அவரது மனைவியும் வீட்டில் இருந்த போது எதிரிகள் அ.சா.1யை அசிங்கமாக திட்டி, செங்ககல்லால்லும், கையாலும தாக்கி, கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. மேற்சொன்ன சம்பவத்தை நான் நேரடியாக பார்த்ததாக போலீசாரிடம் சொல்லிவிட்டு தரப்பினர்கள் சமாதனமாக சென்றதால். வழக்கு சம்பவ சங்கதிகளை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாகவும் அரசுக்கு எதிராகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்./–எஸ்.ஆக்னஸ் ஜெப கிருபா,
நீதித்துறை நடுவர்,
திருவையாறு.

<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.</u>

<u>CC. No. 266/2023</u>

2025–ம் ஆண்டு நவம்பர் மாதம் 11–ம் நாள் செவ்வாய்கிழமை அரசு தரப்பு சாட்சி– 4(PW–4)**–ன் வாக்குமூலம்** (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) **திருமதி.A.பத்மபிரியா மூன்றாம் நிலை எழுத்தர்** அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **சுரேஷ்** | தொழில் | | **விவசாயம்** |
| த/பெ. | : | **கண்ணன்** | ஊர் | | **சாத்துனூர்** |
| வயது | : | 44 | மாவட்டம் | | **தஞ்சாவூர்** |

**<u>11.11.2025</u>**

**<u>எதிரிகள் ஆஜர்.</u>**

**<u>முதல் விசாரணை:</u>**

1) நான் சாத்தனுரில் வசித்து வருகிறேன். அ.சா.1, அ.சா.2 எனது பக்கத்து வீட்டுககாரர். ஆஜர் எதிரிளையும் எனக்கு தெரியும் பக்கத்துவீட்டுக்காரர்கள்.

2) அ.சா.1 எதற்காக வழக்கு தாக்கல் செய்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. வழக்கு பற்றி எனக்கு வேறு எதுவும் தெரியாது. சம்பவம் சமயத்தில் நான் ஊரில் இல்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி, அரசு தரப்பில் அனுமதி கேட்கப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு , நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

கடந்த 01.06.2023 ஆம் தேதி இரவு 10.30 மணியளவில் அ.சா.1 ம் அவரது மனைவியும் வீட்டில் இருந்த போது எதிரிகள் அ.சா.1யை அசிங்கமாக திட்டி, செங்ககல்லால்லும், கையாலும தாக்கி, கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. மேற்சொன்ன சம்பவத்தை நான் நேரடியாக பார்த்ததாக போலீசாரிடம் சொல்லிவிட்டு தரப்பினர்கள் சமாதனமாக சென்றதால். வழக்கு சம்பவ சங்கதிகளை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாகவும் அரசுக்கு எதிராகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை –** இல்லை.</u>

திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்./–எஸ்.ஆக்னஸ் ஜெப கிருபா,
நீதித்துறை நடுவர்,
திருவையாறு.